போக்குவரத்து நெரிசலைக் குறைக்க

முதலமைச்சரின் சாலை மேம்பாட்டுத் திட்டத்தில் பல நகரங்களில் புறவழிச்சாலைகள்!

சட்டப்பேரவையில் உறுப்பினர்கள் கேள்விக்கு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு பதில்!

சென்னை, ஜூன் 23-

போக்குவரத்து நெரிசலைக் குறைக்க பல நகரங்களில் புறவழிச்சாலைகள் அமைக்கப்படுகின்றன என்று சட்டப்பேரவையில் உறுப்பினர் கேள்விக்கு பதிலளிக்கையில் அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.

இது குறித்து பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு:-

பி.அய்யப்பன்: உசிலம்பட்டி நகராட்சிப் பகுதி இருவழிச் சாலையாக இருக்கிறது. உசிலம்பட்டியில் அந்த இருவழிச் சாலை பகுதியில் ஏறக்குறைய 20, 25 திருமண மண்டபங்கள் MAIN ROADலேயே இருக்கின்றன. எனவே, போக்குவரத்து நெரிசலைக் குறைக்கவேண்டும் என்பதற்காக, புறவழிச் சாலை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் எ.வ. வேலு: இந்த ஆட்சி பொறுப்பேற்றவுடனேயே, நகரப் பகுதிகளில் நெரிசல் அதிகமாக இருக்கிறது என்ற காரணத்தினால், புறவழிச் சாலை அமைக்க வேண்டு மென்று, அதற்காக பல நகரங்களில் நாங்கள் அமைத்துக் கொண்டிருக்கி றோம். இந்த ஆண்டு, அவர் கேட்ட கேள்வியை எடுத்துக் கொண்டு, அங்கு புறவழிச் சாலை அமைப்பதற்கு சாத்தியக்கூறு இருக்கிறதா என்று முடிவு செய்யப்பட்டு, முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று, அந்தப் பணிகளை எடுத்துக் கொள்வதற்கு இந்த அரசு முயற்சி செய்யும்.

சி.வி.எம்.பி. எழிலரசன்: காஞ்சிபுரத்தில் இருக்கக்கூடிய கீழம்பிசெவிலிமேடு என்ற புறவழிச் சாலை ஏற்கெனவே கழக ஆட்சியி ன்போதுதான் புறவழிச் சாலையாக அமைக்கப்பட்டது. அதனை நான்கு வழிச் சாலையாக அமைத்துத் தரவேண்டும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நன்கு உணர்ந்திருக்கக்கூடிய சாலை அது. எனவே, அதை அமைக்க முன்வருவாரா என்று கேட்டு அமைகிறேன்.

அமைச்சர் எ.வ. வேலு: தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் புதிதாக ஒரு திட்டத்தை நிறைவேற்றினார்கள். அதாவது, முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டம் என்கிற ஒரு புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, இந்த 3 ஆண்டு காலமாக இரண்டுவழிச் சாலைகளையெ ல்லாம் நான்கு வழிச் சாலைகளாக இந்த அரசு அமைத்துக் கொண்டிருக்கிறது. அவர் சொல்கிற புறவழிச் சாலை என்பது ஓர் அத்தியாவசியமான சாலை தான். ஏனென்றால், நகரத்தைப் பொறுத்தளவிற்கு, காஞ்சிபுரத்திலே நெரிசல் அதிகம். ஆகவே, புறவழிச் சாலை மூலமாகத்தான் செய்யாறுக்கே, நான் என்னுடைய மாவட்டத்திற்கே போக முடியும். அந்தச் சாலையைத் தான் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். இந்த ஆண்டே அந்தச் சாலையை எடுத்துக்கொள்வதற்காக திட்ட மதிப்பீடுகள் எல்லாம் தயார் செய்துகொண்டிருக்கிறோம். இந்த ஆண்டே அந்தச் சாலைப் பணியை நிறைவேற்றுவோம்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

நெய்வேலி சட்டமன்றத் தொகுதி

வடக்கு மேலூர் பாச்சாரப்பாளையம் சாலை அமைக்கப்படுமா?

சட்டப்பேரவையில் சபா. இராஜேந்திரன் வினா!

சென்னை, ஜூன் 23 -

சட்டப்பேரவையில் உறுப்பினர் சபா. இரா ஜேந்திரன் எழுப்பிய கேள்வியைத் தொடர்ந்து நடைபெற்ற விவா தம் வருமாறு: -

சபா ராஜேந்திரன்: நெய்வேலி தொகுதி, வடக்கு மேலூர் பாச்சாரப் பாளையம் சாலையை அகலப் படுத்த அரசு முன்வருமா?

அமைச்சர் எ.வ. வேலு: நெய்வேலி தொகுதி வடக்கு மேலூர் கீழார் பாச்சாரப்பாளையம் சாலை சுமார் 9 கிலோ மீட்டர் நீளம் உடையது. இதிலே 8 கிலோ மீட்டர் சாலை முன்னரே இடைவெளித் தளமாக அகலப்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள 1 கிலோ மீட்டர் சாலை இடைவெளி அகலப் படுத்துவதற்காக CRIDP-ல் 20242025 திட்டத்தின்கீழ் 95 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

சபா. இராசேந்திரன்: அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு நன்றி. இந்தச் சாலையை அகலப்படுத்த ஏற்றுக் கொண்டிருக்கிற அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிற அந்தப் பகுதியில் கிலோ மீட்டர் 6/6 அந்த இடத்தில் ஒரு பழைய CULVERT பாலம் பழுதடைந்துள்ளது. குறுகிய பாலம் அது. அதைச் சரிசெய்கின்ற வகையில் புதிய CULVERT பாலத்தை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன். அதேபோல இந்தப் பகுதியில் உள்ள குறிஞ்சிப்பாடி உட்கோட்டத்தில் உள்ள பேய்க்காநத்தம் கிராமத்தில் தரைப் பாலத்தை மேம்பாலமாக தரமுயர்த்திக் கொடுத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். மேலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அற்புதமான திட்டமான "நான் முதல்வன் திட்டத்தில்" என்னுடைய நெய்வேலி தொகுதியிலுள்ள காட்டுக்கூடலூரிலிருந்து குள்ளஞ்சாவடிக்குச் செல்கின்ற அந்த MDR சாலையை, மாநில நெடுஞ்சாலையாக (SH) தரமுயத்தித் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். உரிய கருத்துருக்களை அரசு அதிகாரிகளும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் அனுப்பி வைத்திருக்கிறார்கள். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அதை மாநில நெடுஞ்சாலையாக தரமுயர்த்தி உரிய நிதியினை ஒதுக்கி, உடனடியாக அதைச் செய்து கொடுப்பதற்கு ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

அமைச்சர் எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" திட்டத்தின்கீழ் கோரப்பட்ட கோரிக்கை என்பது குள்ளஞ்சாவடியிலிருந்து, காட்டுக்கூடலூர் வழியாக விருதாசலம் செல்லும் இரண்டு மாவட்ட முக்கிய சாலைகள் மற்றும் ஒரு மாவட்ட இதர சாலையை இணைக்கிற 39 கிலோ மீட்டர் நீளத்திற்கு மாநில நெடுஞ்சாலையாகத் தரமுயர்த்த வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இது பரிசீலனையில் இன்றைக்கு இருக்கிறது. விரைவிலேயே தரமுயர்த்தி அரசாணை வழங்கப்ப டும். அதோடு மட்டுமல்ல, உறுப்பினர் அவர்கள் தரைப் பாலம் சிலந்திநத்திபுரம் சாலையிலே அமைந்திருக்கிற அந்தத் தரைப் பாலத்தை உயர் மட்டப் பாலமாக அமைக்க வேண்டுமென்று அவர்கள் கேட்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டு முதல மைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடனே தமிழ்நாட்டிலே 1,113 தரைப் பாலங்களை எடுத்துக் கொண்டு அதற்காக திட்டங்கள் எல்லாம் தீட்டப்பட்டு பணிகள் எல்லாம் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன.

அந்த வகையிலே இந்த ஆண்டு உறுப்பினர் குறிப்பிட்டிருக்கிற அந்த தரைப்பாலத்திற்கு 2 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. இந்த நிதியா ண்டிலேயே நிதியொதுக்கப்ப ட்டு அந்தப் பாலம் அவசியம் கட்டித் தரப்படும்.

சபா. இராசேந்திரன்: மீண்டும் அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது நெய்வேலி தொகுதி வழியாகச் செல்கின்ற விக்கிரவாண்டிகும்பகோணம்தஞ்சாவூர் தேசிய நெடுஞ்சாலை பல காலமாக அங்கு வேலைகள் நடைபெறாமல் இருக்கிறது.

2005வது ஆண்டில் அது

தேசிய நெடுஞ்சாலையாக அறிவிக்கப்பட்டு, 2017 ஆம் ஆண்டு TENDER விடப்ப ட்டது. இந்த சாலையில் 63 கிலோ மீட்டர் பரவனாற்று பாலம், அதேபோல, 52 கிலோ மீட்டர் கண்ணுத் தோப்பு பாலம், 48 கிலோ மீட்டர் நெய்வேலி ARCH GATE பகுதி 13 விக்கிரவாண்டி தொகுதி இடங்கள் BLACK SPOTகளாக அறிவிக்கப்பட்டு தொடர்ந்து அங்கே விபத்துகள் நடைபெற்று வருகின்றன. இந்தப் பகுதிகளிலாவது அந்தப் பாலங்களை உடனடியாக கட்டி முடித்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அரசு நியமித்துள்ள CONSULTANT அவர்களுக்கும் NHAI-க்கும் சரியான ஒருங்கிணைப்பு இல்லையென்று சொல்கிறார்கள். எனவே, இது தேசிய நெடுஞ்சாலையாக இருந்தாலும், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் 2, 3 முறை கவன ஈர்ப்பு கொடுத்திருக்கிறோம். எல்லாம் செய்தும்கூட தொடர்ந்து பணிகள் நடைபெறாமல் பெரிதும் மக்கள் அந்தப் பகுதியிலே பாதிக்கப்படுகிறார்கள். அதை கவனத்திலே எடுத்துக்கொணிடு தொடர்ந்து அந்த வேலைகள் மறுபடியும் நடைபெறுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

அமைச்சர் எ.வ. வேலு: விக்கிரவாண்டிகும்பகோணம் தஞ்சாவூர் என்பது தேசிய நெடுஞ்சாலை நான்கு வழிச் சாலை. இதை இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் மூலமாகத்தான் இந்தப் பணி 3 கட்டமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. முதல் பகுதியாக விக்கிரவாண்டி முதல் சேத்தியாதோப்பு வரை சாலைப் பணிகள் மேற்கொள்ள தி/ள் ரிலையன்ஸ் நிறுவனம் 2018ல் ஓர் ஒப்பந்தம் கோரப்பட்டு அந்தப் பணிகள் நிறுத்தப்பட்டது. சாலைப் பணிகள் நடைபெற்ற அந்த நிலையிலே ஒப்பந்ததாரர் மிக மிக தாமதமாக அந்த பணிகளை அவர்கள் செய்து கொண்டிருந்தார்கள். அதேபோன்று இந்தப் பணிகள் விரைந்து செயல்பட வேண்டுமென்று சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே இதே கவன ஈர்ப்பு தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதேபோன்று, நம்முடைய பண்ருட்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தி. வேல்முருகன் இதுகுறித்து தொடர்ந்து சட்டமன்றத்திலே பேசுகிறபோதும் சொன்னார்கள். நேரிலும் என்னிடத்தில் கடிதம் கொடுத்திருக்கிறார்கள். வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் அவர்களும், தொழிலாளர் நலன்திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன் தொடர்ந்து இது குறித்து வலியுறுத்திக் கொண்டே இருந்தார்கள். இதுசம்பந்தமாக நேரில் துறையினுடைய செயலாளரை அழைத்துக் கொண்டு டெல்லியிலே 2 முறை மாண்புமிகு நிதின் கட்கரி அவர்களைச் சந்தித்து தனியாகவே கடிதம் கொடுத்தோம். ஏனென்றால், நீண்ட காலமாகவே சாலைப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அங்கு விபத்துகள் ஏற்படுகின்றன என்று சொன்னதன் அடிப்படையிலே, அவர்கள் அந்த கம்பெனியை அழைத்து, நீங்கள் மிகவும் தாமதமாக பணிகளைச் செய்கிறீர்கள் என்று TERMINATION NOTICE கொடுத்தார்கள். அவ்வாறு வலியுறுத்தியதன் அடிப்படையிலே, 20242025க்குள் TERMINATION செய்த அந்த PERIOD முடி கிறது. அதற்குப்பிறகுதான் அவர்கள் புதிய ஒப்பந்ததாரர்களை அழைக்க முடியும். எனவே, மீண்டும் புதிய ஒப்பந்ததாரர்களை அழைத்துப் பேசி, TENDER விட்டால்தான் அந்தப் பணிகள் நடைபெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

ஆனால், இதன் இரண்டாவது பகுதியாக சேத்தியாதோப்பு முதல் சோழவரம் வரை 2016ல் தி/ள் பட்டேல் என்கிற அந்த நிறுவனம் 50 கிலோ மீட்டர் தூரத்தில் 42.5 கிலோ மீட்டர் பணிகள் இப்போது முடிவுற்றுவிட்டது. மூன்றாவது பகுதியாக சோழவரம்தஞ்சாவூர் வரை தி/ள் பட்டேல் என்கிற அந்த நிறுவனமே 2017ல் துவக்கப்பட்டு 48 கிலோ மீட்டரில் 44 கிலோ மீட்டர் பணிகள் முடிந்துவிட்டன. இன்னும் 2 மாத காலத்திலே இந்த 2 பகுதி பணிகளையும் முடித்துத் தருவதாக அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஏனென்றால், அதையும் நாங்கள் கூர்ந்து கவனித்துக் கொண்டுதான் இருக்கிறோம். இந்த முதல் கட்டம் என்பது மீண்டும் இன்னொரு கம்பெனிக்கு TENDER விடப்பட்டு, அதற்குப்பிறகுதான் பணிகள் துவங்கப்படும். டெல்லிக்குப் போகிறபோது மீண்டும் இதுகுறித்து, விரைவிலே செய்து தர வேண்டி அவர்களிடம் வலியுறுத்தி, இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

சென்னை மேற்கு மாவட்டம் சேப்பாக்கம் பகுதி 114அ வட்ட திமுக சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் கழக அரசின் மூன்றாண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் பகுதி செயலாளர் எஸ் மதன்மோகன் எம்.சி. வரவேற்புரையிலும் வட்டச் செயலாளர் ஏ. தமீம் அன்சாரி தலைமையிலும் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மேற்கு மாவட்ட செயலாளர் நே. சிற்றரசு எம் சி, தலைமை கழக பேச்சாளர் தூத்துக்குடி சரத் பாலா, கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினர். மேலும் இந்நிகழ்ச்சியில் சேப்பாக்கம் பகுதி நிர்வாகிகள், அனைத்து வட்டச் செயலாளர்கள், அணிகளின் மாவட்ட பகுதி வட்ட அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழகத் தோழர்கள் திரளாக பங்கேற்று சிறப்பித்தனர்.

திருவொற்றியூர், மணலி, கத்திவாக்கம் மற்றும்

எண்ணூர் பகுதிகளில் உள்ள தொழிற்சாலைகளைக் கண்காணிக்க அரசின் நடவடிக்கை!

சட்டப்பேரவையில் கழக உறுப்பினர் திருவொற்றியூர் கே.பி.சங்கர் கேள்வி!

சென்னை, ஜூன் 23-

சட்டப்பேரவையில் நேற்று திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் எழுப்பிய கேள்வியும், அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் அளித்த பதிலும் வருமாறு:

கே.பி.சங்கர்: திருவொற்றியூர், மணலி, கத்திவாக்கம் மற்றும் எண்ணூர் ஆகிய பகுதிகளில் உள்ள தொழிற்சாலைகளை தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் மூலமாக கண்காணிக்க அரசு முன்வருமா?

அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன்:திருவொற்றியூர், எண்ணூர், மணலி மற்றும் கத்திவாக்கம் மற்றும் அதன் சுற்றுவாட்டாரப் பகுதிகளில் 17 வகையான தொழிற்சாலைகளும் 17 CATEGORY INDUSTRIES, பெரிய வகை கெமிக்கல் தொழிற்சாலைகளும் RED CATEGORY CHEMICAL INDUSTRIES இயங்கி வருகின்றன. இத்தொழிற்சாலைகள் அனைத்தும் காற்று மாசு கட்டுப்பாட்டு சாதனங்கள் அமைத்து காற்று மாசை கட்டுப்படுத்துகின்றனர். புகை போக்கியிலிருந்து வெளிவரும் வாயுக்களின் தன்மையை அறிய தொடர் கண்காணிப்பு சாதனங்கள் புகை போக்கியில் நிறுவியுள்ளனர். அதபோல் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களிலும் தொடர் கண்காணிப்பு சாதனங்கள் பொறுத்தப்பட்டுள்ளது. அதன் விவரங்கள் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் கேர் ஏர் மையம் (CARE AIR CENTRE) மற்றும் நீர் தரக் கண்காணிப்பு மையத்துடன் இணைக்கப்பட்டு தொடர் கண்காணிப்பில் செயல்பட்டு வருகிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

கே.பி.சங்கர்: முதல்வர் அவர்களை வணங்கி, திருவொற்றியூர் தொகுதியிலுள்ள திருவொற்றியூர், மணலி, எண்ணூர் ஆகிய பகுதிகளில் தொழிற்சாலைகள் மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின்மூலம் அரசு கண்காணிக்க முன்வருமா என்ற கேள்வியைக் கேட்க விரும்புகிறேன்.

அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன்: மணலி, எண்ணூர் மறுசீரமைப்பு மற்றும் புத்துணர்வு நிறுவனம் என்ற சிறப்பு நோக்க நிறுவனம் அறிவிக்கப்பட்டு, அதற்குரிய அரசாணை தமிழக முதலமைச்சர் அவர்களால் 15-3-2024 அன்று வெளியிடப்பட்டு, அதனை நிறுவுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேற்கண்ட நிறுவனமானது, மணலி மற்றும் எண்ணூர் பகுதிகளை பசுமையாக்கும் நடவடிக்கைகள், சமூக உட்கட்டமைப்பு மேம்பாடு, நீர் நிலை பாதுகாப்பு, சதுப்பு நில மறுசீரமைப்பு, திடக்கழிவு மேலாண்மை, மாசு கட்டுப்பாட்டு வாரிய நடவடிக்கைகள் ஆகிய பணிகளை மேற்கொள்ளவிருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், 24 மணி நேரமும் அவரச கால மையம் அமைப்பதற்கும், புதிய சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகமும் 2 பறக்கும் படைகளும் அந்தப் பகுதியில் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

கே.பி. சங்கர்: டிசம்பர் 4 ஆம் தேதி மிக்ஜாம் புயலில் பாதிக்கப்பட்டபோது சென்னையே மூழ்கியது. அப்போது பார்த்தீர்களென்றால் CPCL நிறுவனத்தின்மூலம் அதனுடைய OIL கசிவு கசிந்து வெளியே வந்து கொசஸ்தலை ஆற்றை முழுவதும் நாசம் செய்தது. அந்த கொசஸ்தலை ஆற்றை முழுவதும் நாசம் செய்து, அது எப்படி நடந்தது என்றால் கிட்டத்தட்ட CPCL COMPANYக்கும் கொசஸ்தலை ஆற்றுக்கும் 10 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. அந்த 10 கிலோ மீட்டர்தூரமும் பக்கிங்காம் கால்வாய் வழியாக தான் அது வந்தது. அந்த பக்கிங்காம் கால்வாயை தூர்வாரச் சொல்லி சொன்னோம். அதையும் அந்த MEETINGல் செய்து தரவில்லை. அதற்கு பிறகு பார்த்தீர்களென்றால் நம்முடைய கொசஸ்தலை ஆற்றையும் தூர்வாரி, ஆழப்

படுத்தித் தர CPCL நிறு வனத்திடம் சொன்னோம். அந்த மீனவ மக்களுக்கு, வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க முதல்வர் அவர்கள் நிவாரணம் வழங்கினார்கள். நம்முடைய அண்ணன் விளையாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் நேரடியாக பார்த்து அவர்களுக்கு என்ன தேவையோ வலைக்கு தேவையான பணமோ 12,000 ரூபாய், உறுப்பினருக்குத் தேவையான 10,000 ரூபாயும் வழங்கினார்கள். எல்லாமே கொடுத்துவிட்டு கடைசியில் பார்த்தீர்களென்றால், அதனை தூர்வாரி ஆழப்படுத்தினால்தான் அந்த ஆற்றில் ஒரு மீனோ, இறாலோ, நண்டோ எதுவுமே இல்லை. ஆகவே, நீங்கள் அதை தூர்வாரி ஆழப்படுத்தி கொடுத்தீர்களென்றால் அங்கு வாழக்கூடிய மீனவர்களுக்கும், மீன் வாழ்வாதாரத்திற்கும் என அனைத்திற்குமே சிறப்பாக இருக்கும். (குறுக்கீடு)

தூண்டில் வளைவு ஒன்று ரூ.150 கோடி மதிப்பீட்டில் அமைத்து வரலாற்றுச் சிறப்புமிக்க முதல்வர் அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, விளையாட்டுத் துறை அமைச்சரினுடைய வழிகாட்டுதலின்படி அங்கு தூண்டில் வளைவு அமைத்து வருடத்திற்கு ஒரு 10 பேர் அல்லது 15 பேர் இறந்து போவார்கள். அதை இன்றைக்கு காப்பாற்றி இந்த 3 வருடமாக ஒவ்வொரு வருடமும் கடல் சீற்றமாக இருக்கும்போது இறந்து விடுவார்கள். அதைப்போல் இல்லாமல் இப்பொழுது இந்த தூண்டில் வளைவை அமைத்த பிறகு அந்த 15 உயிர்களையும் காப்பாற்றிய அரசு, இந்த திராவிட மாடல் அரசு. இந்த திராவிட மாடல் அரசின் வழியாக தான் நான் சொல்கிறேன். இப்போது பார்த்தீர்களென்றால் ஈட்டி போய்விட்டது. இந்த OIL கசிவு கசிந்து அந்த ஆற்றில். . . (குறுக்கீடு)

சுற்றுச்சூழல் பிரச்சினையைப் பற்றிதான் சொல்ல வருகிறேன். சுற்றுச்சூழல் துறையோடு சம்பந்தப்பட்டதுதான் இது. அதையெல்லாம் சுத்தம் செய்து தூர்வாரி, ஆழப்படுத்தி கொடுத்துவிட்டீர்களென்றால் மீண்டும் அந்த மீனவர்களுடைய வாழ்வு, வாழ்வாதாரம் உயர்த்தப்படும் ஒன்று. இரண்டாவது பிரச்சினை என்னவென்று பார்த்தீர்களென்றால் ETPSலிருந்து சுடு தண்ணீர் அந்த ஆற்றுக்குள் வருகிறது. முதலில் கடலரிப்புதான் இருந்தது. இப்போது பார்த்தீர்களென்றால் ஆறு அரிப்பு வருகிறது. ஆறு அரிப்பினால் அங்குள்ள மக்கள் வாழ முடியாமல் மிகப்பெரிய சிரமத்திற்குள்ளாகிறார்கள். மண் எல்லாம் அடித்துக் கொண்டு போகிறது. அதையும் சம்பந்தப்பட்ட POLLUTION CONTROL BOARDல் இருந்து வந்து பார்த்தார்கள். பார்த்துவிட்டு இதுவரையில் எந்தவிதமான வேலையும் அவர்கள் செய்யவில்லை. அங்குள்ள மக்களின் வீடு எல்லாம் போய் விட்டது.

அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன்: உறுப்பினருடைய கேள்வி மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லாத என்ற சூழலிலும் முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் தமிழக நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் கொண்டு சென்று அவருக்கான கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு, நடவடிக்கை மேற்கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் பதிலளித்தார்.

அ.ஞானசேகரன் தலைமையில் இரா.செந்தில்குமார் முன்னிலையில்

50-வது வட்டத்தில் கலைஞர் நூற்றாண்டு விழா: சமபந்தி விருந்து!!

சென்னை, ஜூன் 23 -

சென்னை வடக்கு மாவட்டம், இராயபுரம் கிழக்குப் பகுதி 50-வது வட்டக் கழகம் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு சமபந்தி விருந்து நிகழ்ச்சி இன்று (23.06.2024 ஞாயிற்றுகிழமை) பகல் 12.30 மணிக்கு திரௌபதி அம்மன் கோயில் வளாகம், காசிமேட்டில் அ. ஞானசேகரன் தலைமையில் நடைபெறுகிறது.

பகுதிச் செயலாளர் இரா. செந்தில்குமார், ஆர்.வி. கணேஷ், எஸ்.சீனிவா சன், மு.கலியமூர்த்தி, ஏ.மணிவ ண்ணன், ஜி.ஜெயராஜ், ஆர்.வேழவேந்தன், பி.சதீஷ்குமார், டி.மரிய செல்வம், ஏ.கிருஷ்ண வேணி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

ஆர்.பிரசாந்த்ரகு, டி.நாதன், பி.அஜித், கே.சிவக்குமார், டி.விஜி, யு.அனிபா, கே. ஜனுல் ஹக், கே.சிவதனுஷ், எஸ். ஆண்ட்ரூ, ஜி. கோகுல், லி.பரமேஸ்வரன், ஏ.லோகேஸ்வரன், எம். சம்பத், என்.ராஜசேகர், கே.சி.பிரதாபன், சீமென் பி. நரேஷ், எஸ்.பொன்னரசன், பி.மகேந்திரன், என்.கலைமணி, எஸ்.ஏ.ராஜா, ச.அலெக்ஸ் ஆகியோர் வரவேற்கின்றனர்.

சமபந்தி விருந்தினை மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி. சேகர் எம்.எல்.ஏ, டாக்டர். கலாநிதி வீராசாமி எம்.பி. ஐட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ. ஆகியோர் தொடங்கி வைக்கின்றனர்.

இதில் வ.பெ.சுரேஷ், தா. இளையஅருணா, பி.டி.பாண்டிச்செல்வம், ந.மனோ கரன், மு.கோபி, க.நாகம்மை, வே. சிவக்குமார், த.ஜெயபாலன், பி.சேகர், கு.சுந்தர், ப.ஜெயலட்சுமி, லோ.மோகன், லயோலா கே.மதன், கட்பீஸ் ப.சோமசுந்தரமூர்த்தி, லயன். எம்.தீனதயாளன், டீசீனிவாசன். காட்டன் ஜி.சதீஷ்குமார், க.கோவிந்தராஜ், என்.கிருஷ்ணன், பி.கண்ணன், எஸ்.சுரேஷ், க.கலைச்செல்வன், ஐசிஎப்.பழனிவேல், எம்.பாரி, அத்ரோ. பி.முனுசாமி, வி.குமார், எம்.எம்.வெங்கட் , கே.லட்சுமணன், எஸ்.குமார், கே.கணேசன், எஸ்.மணிகண்டன், கே.அசோக், எம்.டில்லிபாபு, டி.கருணாகரன், கே.ரங்கராஜ், செட்டி மு.சந்திரன், இரா. முருகன், ஆர்.குருவம்மாள் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர். டி.ஸ்டீபன், ந.தென்னரசு, பி.பிரபாகரன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

மு.ஜானகிராமன் - ஏ.சாந்தகுமார் தலைமையில் வ.பெ.சுரேஷ் முன்னிலையில்

இராயபுரம் 53 - 53 அ வட்டங்களில் கலைஞர் நூற்றாண்டு விழா - நல உதவிகள்!

ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. – கலாநிதி வீராசாமி எம்.பி. – ஐட்ரீம் ஆர்.மூர்த்தி எம்.எல்.ஏ. வழங்குகின்றனர்!

சென்னை, ஜூன் 23 -

முத்தமிழறிஞர் டாக்டர். கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் மேற்கு பகுதி - 53 வது வட்டத்தில் இன்று (23-06- 2024 ஞாயிறு) மதியம் 1 மணி அளவில் போஜராஜன் நகர், 2வது தெருவில் பகுதிப் பிரதிநிதி மு.ஜானகிராமன் தலைமையில் நடைபெறுகிறது. மேற்கு பகுதி செயலாளர் வ.பெ. சுரேஷ் முன்னிலை வகிக்க, 53வது வட்ட செயலாளர் பாலலட்சுமணன் வரவேற்கிறார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்டப் பொறுப்பாளர் ஆர். டி.சேகர் எம்.எல்.ஏ., கலாநிதி வீராசாமி எம்.பி., இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம். இரா.மூர்த்தி ஆகியோர் நல உதவிகள் வழங்கி சிறப்பிக்கின்றனர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட பகுதி நிர்வாகிகள் , அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர். வட்ட துணை செயலாளர் வி.முனுசாமி நன்றி கூறுகிறார்.

53 அ வட்டத்தில் நல உதவிகள்

முத்தழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா, 101-வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு சென்னை வடக்கு மாவட்டம், இராயபுரம் 53வது அ வட்டத்தில் இன்று (23- 06- 2024 ஞாயிறு) காலை 10 மணியளவில் எம்.எஸ். நகரில் நல உதவிகள் வழங்கப்படுகிறது.

இதில் முன்னாள் மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் ஏ. சாந்தகுமார் தலைமை வகிக்கிறார். இராயபுரம் மேற்கு பகுதி செயலாளர் வ. பெ. சுரேஷ் முன்னிலை வகிக்க, 53வது அ வட்ட செயலாளர் J. கௌரீஸ்வரன் வரவேற்கிறார்.

இந்நிகழ்ச்சியில் சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர். டி. சேகர் எம். எல்.ஏ., கழக அயலக அணித் தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி.,, இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம். இரா. மூர்த்தி ஆகியோர் நல உதவிகள் வழங்குகின்றனர்.

: இதில் கழக செயல் வீரர் எஸ். முருகன், பி. கோபி ஆகியோர் நன்றி கூறுகிறார்.

இந்நிகழ்ச்சிகளில், மாநில நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், மாவட்ட, பகுதி அணிகளின் அமைப்பாளர்கள், நிர்வாகிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.